# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.Voc.**DEGREE EXAMINATION –**3D ANIMATION**

FOURTH SEMESTER – **APRIL 2019**

**16/17UTL4RL01– TAMIL (VOC) - IV**

Date: 12-04-2019 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00-12:00

**பகுதி - அ (10 X 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. மாதரி கண்ணகிக்கு அளித்த பொருட்கள் யாவை?
02. மணிமேகலையில் கூறப்படும் ஐவேறு வனங்களுள் இரண்டினைச் சுட்டுக.
03. குகன் இராமனுக்குக் கொண்டுவந்த உணவு வகைகளை எழுதுக.
04. யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
    தீதும் நன்றும் பிறர்தர வாரா - பொருள் தருக.
05. ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்
    ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை - பொருள் கூறுக.
06. பாடாண் திணை என்றால் என்ன?
07. தேவார மூவர் யாவர்?
08. முதலாழ்வார் மூவரின் பெயரினைக் குறிப்பிடுக.
09. நிறுத்தக் குறிகளில் எவையேனும் நான்கினை எழுதிக் காட்டுக.
10. தன்விவரப் பட்டியலில் இடம்பெறுவனவற்றுள் எவையேனும் நான்கினைச் சுட்டுக.

**பகுதி - ஆ (5 X 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. கோவலன் தன் செயல்களுக்காக வருந்தியதையும் அதற்கு கண்ணகி அளித்த மறுமொழியையும் எழுதுக.
12. குகன் இராமன் மீது கொண்ட அன்பினை மொழிக.
13. ‘பிறனில் விழையாமை’ப் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைத் தருக.
14. ‘நிலத்தினும் பெரிதே’, யாயும் ஞாயும்’ எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடற்கருத்துகளை விளக்குக.
15. நும் தெருவில் அமைந்துள்ள மின்விளக்குகளைப் பழுது பார்க்குமாறு மாநகராட்சி ஆணையர்க்குக் கடிதம் ஒன்று வரைக.
16. ‘எளிமை ஓர் அறம்’ என்பதை மு.வ. வழி நின்று உரைக்க.
17. சங்க இலக்கியங்களைப் பட்டியலிடுக.

**பகுதி - இ (3 X 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க**

18. மலர் வனம் சென்ற மணிமேகலை வழியில் கண்ட காட்சிகளைத் தொகுத்துரைக்க.

    **( அல்லது )**

    நும்பாடப்பகுதியில் இடம்பெற்ற புறநானுற்றுப் பாடல்கள் கூறும் வாழ்வியல் அறங்களைக் கட்டுரைக்க.

19. ‘தமிழ் ஒரு செவ்வியல் மொழி’ என்பதற்கான காரணங்களைப் பட்டியலிடுக.

    **( அல்லது )**

    ‘சான்றாண்மை’ எனும் தலைப்பில் அமைந்த கட்டுரைச் செய்திகளைத் தருக.

20. திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் பற்றி உரைக்க.

    **( அல்லது )**

    சமணர், பௌத்தர் இவர்தம் தமிழ்த் தொண்டினைத் தொகுத்தெழுதுக

---